# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No. 25/2017

Deposition of Witness for Prosecution PW-1
Name :திரு. ஸ்ரீதர்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 24th day of July– 2019.

முதல் விசாரணை:-

நான் தற்போது தேவூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி செல்வராஜ் எனது உதவியாளர் ஆவார். கடந்த 21-12-2015 அன்று நான் என் அலுவலகத்தில் பணியிலிருந்த போது காலை சுமார் 11 மணிக்கு எனது உதவியாளர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு காளியாளம்பட்டி அன்னமார் கோவில் பின்புறம் சரபங்கா ஆற்றின் பாலத்தின் அருகில் நீரில் ஒரு சடலம் மிதப்பதாக தகவல் கொடுத்தார். உடடினயாக நான் என் உதவியாளர் கூறிய மேற்படி இடத்திற்கு நேரில் சென்று பார்த்த போது ஆற்றின் மேற்கு புறமாக தண்ணீரில் குப்புற ஒரு ஆண் பிரேதம் நீரில் மிதந்த நிலையில் இருந்தது. அதை பார்த்துவிட்டு தேவூர் காவல் நிலையம் சென்று இது குறித்து ஒரு புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவதுதான் மேலே கூறியவாறு என்னால் கொடுக்கப்பட்டதாகும்.அது அ.சா.ஆ 1. பின்னர் காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடம் வந்து பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ 2. பின்னர் மேலே கூறியவாறு மிதந்த

பிரேதத்தை வெளியில் தூக்கி போட்டு பின்னர் உதவி ஆய்வாளர் அந்த பிரேதத்தை பார்வையிட்டு பிரேத விசாரணை செய்தார். பிரேதத்தை அடையாளம் காண முடியவில்லை. பின்னர் அங்கு வந்திருந்த மருத்துவர் அதே இடத்தில் வைத்து பிரேதத்தை சடலக் கூராய்வு செய்தார். பின்னர் அருகிலுள்ள சுடுகாடடு அருகில் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டு விட்டது. பின்னர் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் அலுவலகம் சென்று விட்டேன். அதன்பின் கடந்த 10-1-2016 அன்று நானும் எனது உதவியாளரும் எங்கள் அலுவலகத்தில் இருந்த போது காலை 9 மணியளவில் தேவூர் காவல் நிலையத்திலிருந்து இந்த வழக்கு சம்மந்தமாக இரண்டு நபர்களை விசாரிக்கவேண்டியிருப்பதால்அங்கு வருமாறு அழைததன் பேரில் நானும் எனது உதவியளாரும் மேற்படி காவல் நிலையம் சென்றோம். அங்கு அருள்பிரகாஷ் மற்றும் சதாசிவம் என்பவரும் இருந்தார்கள். ஆஜர் 1,2 எதிரிகள் தான் மேலே கூறியவாறு காவல் நிலையத்தில் இருந்தவர்கள் ஆவார். பின்னர் அன்று காலை 9-30 மணியளவில் 1 வது எதிரியை ஆய்வாளர்கைது செய்துவிசாரித்த போது தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை ஆய்வாளர் அதனை பதிவு செய்தார். அதில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம்., 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்கு்முலத்தின் என்னிடம் காட்டப்படும் முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். சாட்சியின் அந்த கையெழுத்து மட்டும்அ.சா.ஆ 3 ஆகும். 1 வது எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்தில் பயன்படுத்திய காரையும் சம்பவத்தின் போது கொலை செய்யப்பட்டவர் வைத்திருந்த செல்போன் ஒன்றையும், 1 வது எதிரியின் செல்போனையும் எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறினார். பின்னர் காலை 10-30 மணிக்கு 1- வது எதிரி இரண்டு செல்போன்கள் சிம்கார்டு மற்றும் டாடா இண்டிகா கார் பதிவு எண் டி என் 37 சி கே 4675 காரையும் ஆஜர் செய்தார். மேற்படி செல்போன்களை பார்த்தால் அடையாளம் சொல்வேன். என்னிடம் காட்டப்படும் இரண்டு செல்போன்கள் இரண்டுதான் 1 வது எதிரி மேலே கூறியவாறு எடுத்து ஆஜர்படுத்தியதாகும்.அது சா.பொ. 1 வரிசை. 1 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 4. மேற்படி செல்போன்கள் மற்றும் காரை ஆய்வாளர் படிவம் 95 ல் கைப்பற்றியதில் நான் சாட்சியாக கையெழுத்துசெய்தேன். அந்த படிவம் அ.சா.ஆ 5 . அதன்பின்னர் காலை 11-00 மணிக்கு 2 வது எதிரியை ஆய்வாளர் விசாரித்த போது அவரும் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வது எதிரி சம்பவ சமயத்தில் பயன்படுத்தியதாக கூறி ஒரு செல்போனை சிம் கார்டுடன் ஆஜர்படுத்துவதாக கூறினார். அந்த செல்போனையும் ஆய்வாளர் படிவம் 95 மூலம் கைப்பற்றினார். அதிலும் நானும் எனது உதவியாளரும்

சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த படிவம் 95 அ.சா.ஆ 6. 2 வது எதிரியின் ஒப்புதல் வாக்கு்மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.,ஆ 7. 2 வது எதிரி ஆஜர்படுத்திய செல்போன் தான் என்னிடம் காட்டப்படுவதாகும்.அது சா.பொ. 2. 2 வது எதிரியின் ஒப்புதல் வாக்கு்மூலத்தில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ 8. பின்னர் ஆய்வாளர் 1,2 எதிரிகளை சம்பவம் நடந்த இடத்தை அவர்கள் காட்டுவதாக கூறியதன் பேரில்அதே தினம் மதியம் 1 மணிக்கு 1,2 எதிரிகளை ஆய்வாளர் சம்பவம் நடந்ததாக கூறப்படும் வெள்ளாளபாளையம் செட்டியார் காடு ஆலமரத்து விநாயகர் கோவில் ஆற்றங்கரைக்கு அழைத்து சென்றார். அங்கு 1,2 எதிரிகள் பாபு என்பவரை அந்தஇடத்தில் வைத்து கொலை செய்து ஆற்றில் துாக்கி போட்டதாக சொன்னார்கள். பின்னர் ஆய்வாளர் அந்த இடத்தை பார்த்து ஒரு பார்வை மகஜர்மற்றும்மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரிலும் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகஜர்அ.,சா.ஆ 9.பின்னர் ஆற்றின் படிக்கட்டில் இரத்தம் படிந்திருந்த கல்லையும் அருகில் புதரில் மறைத்து வைத்திருந்த கத்தி ஒன்றையும் 1 வது எதிரி எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர்படுத்தினார். அந்த கத்திதான் என்னிடம் காட்டப்படுவதாகும். அது சா.பொ.3. என்னிடம் காட்டப்படும் கல் சா.,பொ., 4. மேற்படி கத்தி மற்றும் கல்லை ஆய்வாளர் ஒரு மகஜர் மூலம் கைப்பற்றினார். அந்த மகஜரிலும் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 10 ஆகும். பின்னர் மாலை 4 மணிக்குசித்தோடு சாணார்பாளையம் என்பவர் வீட்டிற்கு இந்த வழக்கில் சம்மந்தப்பட்டதாக கூறப்படும் சந்திரசேகர் என்பவர் வீட்டிற்கு 1,2 எதிரிகள் ஆய்வாளரை கூட்டிசென்றார்கள். நாங்களும்அவர்களுடன் சென்றோம். அன்று மாலை 4 மணிக்கு சந்திரசேகர் வீட்டில் வைத்து ஆய்வாளர் அவரை கைதுசெய்தார். பின்னர் சந்திரசேகரை விசாரித்த போது அவரும் தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்கு்மூலத்தை ஆய்வாளர் பதிவு செய்ததில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். 3 வது எதிரியின் ஒப்புதல் வாக்கு்மூலத்தில்உள்ள எனது கையெழுத்து அ.சா.,ஆ 11 . மேற்படி ஒப்புதல் வாக்கு்மூலத்தின் 3 வது எதிரி சம்பவ சமயத்தில் தான் பயன்படுத்தியதாக கூறி ஒரு செல்போனை எடுத்து ஆஜர் படுத்தினார்.அந்த செல்போனையும் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அதிலும் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த செல்போன் இரண்டு சிம் கார்டுகளைகொண்டது.அந்த செல்போன்தான் என்னிடம் காட்டப்படுவதாகும். அது சா.பொ. 5. 3 வது எதிரியின் ஒப்புதல் வாக்கு்மூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 12. 3-வது எதிரியின் செல்போன் கைப்பற்றியதற்கான மகஜர் அ.சா.ஆ 13. பின்னர் மேற்படி எதிரிகளுடன்

கோவை சரவணம்பட்டி சிவானந்தபுரத்தில் உள்ள இறந்த பாபு என்பவரின் வீட்டிற்கு சென்றோம். அங்கு 1 வது எதிரி தேவிஸ்ரீ என்பவர் பாபுவின் கொலையில் சம்மந்தப்பட்டவர் என்று சொல்லி அடையாளம் காட்டினார். பின்னர் அன்றுஇரவு 8 மணிக்கு ஆஜர் 4 வது எதிரியாகிய தேவிஸ்ரீ என்பவரை பெண் காவலர் உதவியுடன் கைதுசெய்தார். அவரை ஆய்வாளர் விசாரித்த போது 4 வது எதிரியும் தாமாக ஒரு ஒப்புதல் வாக்கு்முலம் கொடுத்தார். ஆய்வாளர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததில் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்துசெய்தோம். அந்த ஒப்புதல் வாக்கு்முலத்தில் உள்ள சாட்சிகளின் கையெழுத்து மட்டும் அ.,சா.ஆ 14. அந்த ஒப்புதல் வாக்கு்முலத்தில் 4 வது எதிரி சம்பவ சமயத்தில் பயன்படுத்திய செல்போன் ஒன்றை இரண்டு சிம்கார்டுகளுடன் கூடியதை எடுத்து ஆஜர்படுத்தினார். அந்த செல்போனை ஆய்வாளர் மகஜர் மூலம் கைப்பற்றியதில் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 15. மேலே கூறியவாறு 4 வது எதிரியிடமிருந்து கைப்பற்றிய செல்போன் சா.பொ. 6. அதனை கைப்பற்றிய போது இரவு 9 மணியிருக்கும். 4 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமுலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 16. பின்னர் எதிரிகளுடன் ஆய்வாளர் காவல் நிலையம் திரும்பினார். ( சாட்சி தரைதளத்தில் நிறுத்தப்பட்டுள்ள காரினை சென்று பார்த்து வர அனுமதிக்கப்படுகிறார்) நான் தரை தளத்திற்கு சென்று பார்த்த கார் தான் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட டி என் 37 சி கே 4675 கார் ஆகும். அது சா.பொ., 7. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை.. இல்லை.

Sd/- Sridhar                                                    Sd/-III ADJ Salem.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.88/2015

Deposition of Witness for Prosecution PW-7
Name :திரு. சிவா
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 24th day of July– 2019.

முதல் விசாரணை:-

நான் தற்போது சந்தியூர் ஆட்டையாம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் சம்பவ காலத்தில் கன்னங்குறிச்சி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். அந்த சமயத்தில் எனது உதவியாளராக மாணிக்கம் என்பவர் பணிபுரிந்தார். 19-10-2013 அன்று பொது மக்கள் மற்றும் கிராம உதவியாளர் கொடுத்த தகவலின் பேரில் சின்னத்திருப்பதி பாலாஜி நகரில் இரட்டை கொலை நடந்திருப்பதாக கேள்விப்பட்டு மேற்படி பாலாஜி நபர் பகுதிக்கு நானும் எனது உதவியாளரும் பகல் சுமார் 12-00 மணியளவில் சென்றோம். அங்கு பொது மக்கள் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் வெட்டுப்பட்டு கிடந்த ராஜாத்தி என்பவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதன்பின்னர் பகல் 2-30 மணியளவில் கன்னங்குறிச்சி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்துஅந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார். மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜரில் நானும் எனது உதவியாளர்மாணிக்கமும் சாட்சிகளாக கையெழுத்துசெய்தோம்., என்னிடம்

காட்டப்படும் பார்வை மகஜர் தான் மேலே கூறியவாறு தயார் செய்யப்பட்டதாகும். அது அ.சா.ஆ 3 ஆகும் பின்னர் 19-10-2013 மாலை 4-45 மணியளவில் அங்கிருந்த இறந்த ராமகிருஷ்ணனின் ரத்தக்கறை படிந்த டைல்ஸ் மாதிரி ஒன்று , ரத்தக்கறை படியாத டைல்ஸ் ஒன்று, இறந்த ராமகிருஷ்ணனின் தலைக்குஅடியில் வைத்திருந்தமஞ்சள் மற்றும் பச்சை நிறம் கொண்ட தலையணை உறை ஒன்று, இறந்த ராஜசேகர் படுத்திருந்த ரத்தக்கறை படிந்த படுக்கை விரிப்பு ஒன்று, ராஜசேகர் தலைக்கு அடியில்வைத்திருந்த பச்சை மற்றும் மஞ்சள் நிறம்கொண்ட தலையணை உறை ஒன்று, ராஜசேகர் தலையிலிருந்து ரத்தம் படிந்த டைல்ஸ் ஒன்று, மற்றும் ரத்தக்கறை படியாத டைல்ஸ் ஒன்று, ஆகியவற்றை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அப்போது பிற்பகல் 4.45 மணியிருக்கும்அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல்மகஜர் அ.சா.ஆ 4. மேலே கூறியவாறு கைப்பற்றப்பட்ட இறந்த ராமகிருஷ்ணன் மற்றும்ராஜசேகர் ஆகியோரின் இரத்தம் படிந்த டைல்ஸ் தான் என்னிடம் காட்டப்படும் சா.பொ. 23 மற்றும் 24 ஆகும்., இரத்தக்கறை படியாத மேலே கூறியவாறு கைப்பற்றப்பட்ட டைல்ஸ்களை பார்த்தால்அடையாளம் சொல்வேன். என்னிடம் காட்டப்படும் ராமகிருஷ்ணன் பக்கத்தில் இருந்து எடுத்த ரத்தக்கறை படியாத டைல்ஸ்தான் மேலே கூறியவாறு கைப்பற்றப்பட்டதாகும். அது சா.பொ. 25. என்னிடம் காட்டப்படும் ராஜசேகர் பக்கத்தில் இருந்து எடுத்த இரத்தக்கறை படியாத டைல்ஸ்தான் மேலே கூறியவாறுகைப்பற்றப்பட்டதாகும்., அது சா.,பொ., 26. அதன்பின்னர் 30-10-2013 அன்று இரவு சுமார் 10, 10-15 மணியளவில்மேற்படி ஆய்வாளர் சின்னமுனியப்பன் கோவில் அருகில் சந்தேகப்படும்படியாக ஒரு நபரை விசாரணை செய்யவேண்டியிருப்பதால் என்னையும் உன் உதவியாளரையும் மேற்படி இடத்திற்கு வருமாறுஅழைத்தன்பேரில் நாங்கள் இருவரும் மேற்படி இடத்திற்கு சென்றோம். அங்கு போலிசாருடன் ஒரு நபர் இருந்தார். அந்த நபரின் பெயர் கண்ணன் என்று கூறி தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்கு்முலம் கொடுத்தார். அப்போதுஇரவு 10-45 மணியிருக்கும். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்ததில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். 6 வது எதிரியாகிய கண்ணன் தனதுஒப்புதல் வாக்கு்முலத்தில் தன்னை அழைத்து சென்றால் ராமகிருஷ்ணன் வீட்டில் கொலை செய்து கொள்ளையடித்த சம்பவத்தன்று தான் வைத்திருந்த ரத்தம் படிந்த உருட்டுக்கட்டை ஒன்றையும் அங்கிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பல்ஸர் பைக் டி என் 30 ஜே 8010 பைக்கையும் அவைகளை மறைத்து வைத்திருக்கும் இடங்களைஅடையாளம் காட்டி எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறினார். பின்னர் மேற்படி எதிரி கூறிய இடத்திற்கு ஆய்வாளர் உள்ளிட்ட நாங்கள் மேற்படி எதிரியுடன் அவர் கூறிய அஸ்தம்பட்டி ஜே ஜே

கேட்வே பிளாட்டின் முட்புதருக்கு சென்றோம். அங்கு 6 வது எதிரி தான்மறைத்து வைத்திருந்த ரத்தக்கறை படிந்த ஒரு உருட்டு கட்டையை எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர்படுத்தினார். அதனை ஆய்வாளர் ஒரு மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அப்போது நள்ளிரவு 1 -00 மணியிருக்கும் .அந்த மகஜர் தான் என்னிடம் காட்டப்படுவதாகும். அதுஅ.சா.ஆ 5. 6 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.,சா.,ஆ 6. 6 வது எதிரி மேலே கூறியவாறு எடுத்து ஆஜர்படுத்திய உருட்டு கட்டைதான் என்னிடம் காட்டப்படும் சா.பொ. 8 ஆகும். (அது ஏற்கனவே குறியீடுசெய்யபட்டிருக்கிறது) பின்னர் 31-10-2013 காலை 6 மணியளவில் பெருந்துறை- சிப்காட் செல்லும் வழியில் உள்ள சரளை கிராமத்திற்கு 6 வது எதிரியுடன் ஆய்வாளர் சகிதம்சென்றபோது அங்கு மேற்படி எதிரி முட்புதரில்மறைத்து வைத்திருந்த கருப்பு கலர் பல்ஸர் பைக்கை எடுத்து ஆஜர்படுத்தினார். அதனை ஆய்வாளர் ஒரு மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரிலும் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்துசெய்தோம். அந்த மகஜர் அ.சா.ஆ 7. 31-10-2013 காலை சுமார் 9-15 மணியளவில் கன்னங்குறிச்சிபுது ஏரிக்கரை பகுதியில் நின்று கொண்டிருந்த நபரை போலிசார் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயர் தீனதயாளன் என்று கூறி இந்த வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பது குறித்து தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமுலம் கொடுத்தார்,. அப்போது காலை 9-45 மணியிருக்கும். அதில் 3 வது எதிரி தீனதயாளன் தன்னை அழைத்து சென்றால் சம்பவத்தின்போது தான் வைத்திருந்த மரப்பலகையையும் , சம்பவஇடத்தில் கொள்ளையடிக்கப்பட்ட ரூபாய் 26 ஆயிரத்தையும், மறைத்து வைத்திருக்கும்இடத்தை அடையாளம் காட்டி எடுத்துஆஜர்படுத்துவதாக சொன்னதின்பேரில் மேற்படி எதிரியை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்ற போது அங்கிருந்து மரப்பலகை மற்றும்ரூபாய் 26 ஆயிரம் பணம் ஆகியவற்றை மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர்படுத்தினார்.அப்போது காலை 11-30 மணியிருக்கும். 3 வது எதிரி ஆஜர்படுத்திய மரப்பலகை தான் என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ. 5 ஆகும். என்னிடம் காட்டப்படும் ரூபாய் 26 ஆயிரம் தான் மேலே கூறியவாறு 3 வது எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகும்.அது சா.பொ., 17 ஆக ஏற்கனவே குறியீடுசெய்யப்பட்டுள்ளது. மேற்படி மரப்பலகை மற்றும் பணம் ரூ 25ஆயிரத்தை ஆய்வாளர் கைப்பற்றிய மகஜரில் கைப்பற்றியதில் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 8. 3 வது எதிரியின் ஒப்புதல் வாக்குமுலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.,ஆ 9. 31-10-2013 அன்று மதியம் சுமார் 1-00 மணியளவில் சேலம் ராமநாதபுரம் பஸ் ஸ்டாப்

அருகில் நின்றுகொண்டிருந்த ஒருநபரை போலிசார் சந்தேகித்து சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தார்கள்.அப்போது தனது பெயர் பிளேடு செல்வம் என்கிற பன்னீர் செல்வம் என்றும் தான் இந்த குற்றவழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாகவும் சொல்லி ஒரு ஒப்புதல் வாக்கு்முலம்கொடுத்தார்., அந்த ஒப்புதல் வாக்கு்முலத்தில் 4 வது எதிரி தன்னை அழைத்து சென்றால் ராமகிருஷ்ணன் வீட்டில் இரும்பு கேட்டை உடைக்க பயன்படுத்திய இரும்பு லிவர் ஒன்றினை மறைத்து வைத்திருப்பதை எடுத்து ஆஜர்படுத்துவதாக கூறினார். மேலும் அவர் சம்பவத்தின்போது தான் அணிந்திருந்த உடைகளையும் மறைத்துவைத்திருப்பதை எடுத்து அடையாளம் காட்டுவதாக கூறினார். அதன்பேரில் 4 வது எதிரியை அழைத்து கொண்டு அவர் கூறிய சின்னத்திருப்பதி சாந்தி நகர் பிளாட்டின் முட் புதர் பகுதிக்கு சென்றோம். அங்கு 4 வது எதிரி இரத்தக்கறை படிந்தஇரும்பு லிவர் ஒன்று மற்றும்வெள்ளை நிற முழுக்கை சர்ட் மற்றும் புளு ஜீன்ஸ் பேண்ட் ஆகியவற்றை எடுத்து ஆஜர் படுத்தினார். அவைகளை ஆய்வாளர் ஒரு மகஜரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். அந்த மகஜரிலும் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாககையெழுத்து செய்தோம். அந்த மகஜர் அ.சா.ஆ 10 . மேற்படிஇரும்புலிவர் தான் என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே சா.பொ., 6 ஆக குறியீடு செய்யப்பட்டிருப்பதாகும். என்னிடம் காட்டப்படும் வெள்ளைநிற முழுக்கை சர்ட் சா.பொ. 27. ஜுன்ஸ் பேண்ட் சா.பொ. 28. 4 வது எதிரி கொடுத்தஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 11. மேற்கூறிய பொருட்களை கைப்பற்றிய போது பிற்பகல் 3 மணியிருக்கும். பின்னர் 19-11-2013 அன்று இரவு சுமார் 9-45 மணியளவில் ஆய்வாளர் அவர்கள் நீதிமன்ற காவலில் இருக்கும் ஒரு நபரை நீதிமன்ற அனுமதியின் பேரில் கஸ்டடி எடுத்திருப்பதாகவும் அவரை விசாரிக்க இருப்பதாகவும்சொல்லி என்னையும் என் உதவியாளரையும் அழைத்ததின்பேரில் நான் கன்னங்குறிச்சி காவல் நிலையம் சென்றேன். அப்போது அங்கிருந்த மணிகண்டன் என்பவரை இரவு 10-00 மணியளவில் ஆய்வாளர் விசாரித்த போது தனது பெயர் மணிகண்டன் என்று கூறி இந்த குற்ற வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாக சொல்லி ஒரு ஒப்புதல் வாக்கு்முலம் தாமாக முன் வந்துகொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்கு்மூலத்தை ஆய்வாளர் பதிவு செய்ததில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்துசெய்தோம். அந்த ஒப்புதல் வாக்கு்முலத்தில் மேற்படி எதிரி மணிகண்டன் தன்னை அழைத்துசென்றால் ராமகிருஷ்ணன் வீட்டில் சம்பவத்தின்போது பயன்படுத்திய டி வி எஸ் 50 வண்டியையும் தான்சம்பவத்தல் பயன்படுத்திய வளைவு கத்தியையும், இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு எதிரியாகிய எடப்பாடி செல்வம் சம்பவத்தின்போது பயன்படுத்திய வீச்சரிவாளையும் மேலும் சம்பவத்தில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை திருப்பூர்

மணிமாறன் என்பவரிடம்அடமானம் வைத்திருப்பதை வாங்கி ஆஜர்படுத்துவதாகவும் கூறியதன்பேரில் மேற்படி எதிரியை 20-11-2013 அன்று காலை 7-00 மணிக்கு பெரிய கொல்லப்பட்டி மாரியம்மன்கோவில் எதிரில் உள்ள எதிரி மணிகண்டன் வீட்டிற்கு அவர் கூறியபடி அழைத்துசென்றபோது டி வி எஸ் 50 பதிவு டி ஏ எம் -9355 பதிவெண் கொண்ட வண்டியையும், வளைவு கத்தி ஒன்றையும், வீச்சரிவாள் ஒன்றையும் எடுத்து ஆஜர்படுத்தினார். அவைகளை ஆய்வாளர் ஒரு மகஜரில் எங்கள் முன்னிலையில்கைப்பற்றினார். அந்த மகஜரில் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்துசெய்தோம். அந்த மகஜர் அ.சா.ஆ 12. ( சாட்சி நீதிமன்ற வளாகத்தில் உள்ள சா.பொ. 18 பைக் மற்றும் டி வி எஸ் 50 பதிவு எண் டி ஏ எம் 9355 வாகனங்களை பார்த்து வர அனுமதிக்கப்படுகிறார்) நீதிமன்ற வளாகத்தில் நான் பார்த்த சா.பொ. 18 பல்ஸர் பைக்தான் மேலே கூறியவாறு கைப்பற்றப்பட்டதாகும். என்னால் நீதிமன்ற வளாகத்தில் பார்க்கப்பட்ட மேற்படி டி வி எஸ் 50 சா.பொ. 29 ஆகும். மேற்படி 1 வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 13. 20-11-2013 அன்று பகல் சுமார் 12 மணியளவில் திருப்பூர் ஆத்துப்பாளையம் பாரதி நகர் கதவு எண் 3/72 என்ற வீட்டின் முன்பிருந்த மணிமாறன் என்பவரை எதிரி மணிகண்டன் அடையாளம் காட்டினார் . மேற்படி மணிமாறன் தன்னிடமிருந்த 1 -1/4 பவுன் எடையுள்ள பாக்ஸ் டைப் செயின் ஒன்று, முக்கால் பவுன் எடையுள்ள பூ மாடல் மோதிரம் ஒன்றையும் , 1/2 பவுன் எடையுள்ள டி.வி டைப் மோதிரம் ஒன்றையும் எடுத்து ஆஜர்படுத்தினார். மேற்படி நகைகளை எதிரி மணிகண்டன் தன்னிடம் அடமானம் வைத்ததாக சொல்லி எடுத்துஆஜர்படுத்தினார். அவைகளை ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரிலும் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த மகஜர் அ.சா.,ஆ 14. மேற்படி சொத்துக்கள்தான் ஏற்கனவே சா.பொ. 10,12,15 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நகைகள்ஆகும். பின்னர் 12-2-2014 அன்று ஆய்வாளர் அவர்கள் நீதிமன்ற காவலில் இருக்கும் ஒரு நபரை கஸ்டடி எடுத்து விசாரணைசெய்யவேண்டியிருப்பதாக சொல்லி அழைத்ததின்பேரில் நானும் எனது உதவியாளரும்மேற்படி காவல் நிலையத்திற்குசென்றோம்.அப்போது அங்கிருந்த நபர்தனதுபெயர் எடப்பாடிசெல்வம் என்று கூறி தாமாக முன் வந்துஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்கு்முலத்தை ஆய்வாளர் பதிவு செய்ததில் நானும் எனது உதவியாளரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்கு்முலத்தில் 2 வது எதிரி எடப்பாடி செல்வம் தன்னை அழைத்துசென்றால் ஒசூரில் உள்ள அம்பரீஸ் என்பவரிடம் இவ்வழக்கு சம்பவத்தில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை அடமானம் வைத்திருப்பதை வாங்கி கொடுப்பதாக கூறினார்.அதன்பேரில் 2

வது எதிரி மற்றும் போலிசார் சகிதம் ஒசூர் சென்ற போது 13-2-2014 அன்று காலை சுமார் 7-00 மணியளவில் ஒசூர் சுண்ணாம்புகார தெரு,எம்.ஜி. ரோட்டில் உள்ள அம்பரிஸ் என்பவரது வீட்டிற்கு எடப்பாடிசெல்வம் அடையாளம் காட்ட சென்றபோது அங்கு மேற்படிஅம்பரிஸ் என்பவர் எடப்பாடி செல்வம் என்பவர் என்னிடம் அடமானம் வைத்திருந்த நகைகள் என்றுசொல்லி சுமார் 5 பவுன் மதிப்புள்ள தங்க முறுக்கு செயின் ஒன்று, சுமார்1/2 பவுன் எடையுள்ள டி . வி. டைப் மோதிரம் ஒன்று, சுமார் 1/2 பவுன் எடையுள்ள எட்டு பட்டை கட்டிங் உள்ள பூ மாடல் மோதிரம் ஒன்று, ஆகியவற்றை எடுத்து ஆஜர் படுத்தினார். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 9,13,14 நகைகள்தான் மேலே கூறியவாறு 2 எதிரி மூலம் கைப்பற்றப்பட்டதாகும். மேற்கூறிய நகைகளை ஆய்வாளர் ஒரு மகஜரில் கைப்பற்றியதில் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த கைப்பற்றிய மகஜர் அ.சா.ஆ 15. பின்னர் ஒசூரிலிருந்து மேற்படி எதிரியை அழைத்து கொண்டு ஆய்வாளர் சேலம் திரும்பினார். நானும் சேலம் திரும்பி அலுவலகத்திற்கு போனேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை( 1 வது எதிரி தரப்பில்)

19-11-2013 அன்று போலிசார் என்னை அழைத்து போது நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்றால் ,நான் சம்பவம் நடந்து 6 ஆண்டு காலமாகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆய்வாளர் எவ்வாறு அழைத்தார் என்றால் செல்போன் மூலமாக அழைத்தார். அப்போது ஆய்வாளர் என்ன விவரங்கள் சொன்னார் என்றால் நீதிமன்ற காவலில் இருந்து எடுத்து வந்திருக்கும் மணிகண்டன் என்பவரை விசாரணை செய்ய வேண்டியிருப்பதாக என்னையும் என் உதவியாளரையும் காவல் நிலையம் வருமாறு அழைத்தார். என்னை ஆய்வாளர் அழைத்தபோது இரவு சுமார் 9-15 மணியிருக்கும். அந்த சமயத்தில் நான் என் உதவியாளருக்கு செல்போன் மூலம் தகவல் கொடுத்து வரவழைத்தேன். அந்த சமயத்தில் இரவு நேரம் என்பதால் நான் அலுவலகத்தில் இல்லை. நான் காவல் நிலையம் சென்ற போது இரவு 9-45 , 10-00 மணியிருக்கும். 1 வது எதிரியை சிறைச்சாலையிலிருந்து போலிசார் எந்த தேதியில் எத்தனை மணிக்கு அழைத்து வந்தார்கள் என்பது ஞாபகமில்லை. நீங்கள்ஜெயிலுக்குசென்றீர்களா என்றால் இல்லை., மணிகண்டனை காவல் நிலையத்திற்கு போலிசார் அழைத்து வந்தபோது நீங்கள் உடன் இருந்தீர்களா என்றால் இல்லை., ஞாபகம் இல்லை என்பது ஏற்கனவே ஞாபகம் இருந்து தற்போது ஞாபகம் இல்லை என்று சொல்ல முடியும் என்றால் சரியா என்றால் சரிதான். நான் மணிகண்டனை ஜெயிலில் இருந்து எடுத்த போது நான் அங்கு போகவில்லை. அவரை எத்தனை மணிக்கு எடுத்தார்கள் என்று குறிப்பாக தெரியாது. நான் காவல் நிலையம் செல்வதற்கு முன்பாக மணிகண்டனை போலிசார் விசாரித்தார்களா என்பது

உங்களுக்குதெரியுமா என்றால் தெரியாது. நான் காவல் நிலையம் சென்றபோது மணிகண்டன் காவ்ல நிலையத்தில் ஒரு அறையில்இருந்தார்.அந்த அறையில் யார் யார் இருந்தார்கள் என்றால் ஆய்வாளரும்மற்றும் காவலர்களும் இருந்தார்கள். மணிகண்டனை ஆய்வாளர் விசாரித்தார். மணிகண்டன் சொன்னதை ஆய்வாளர் கூற அருகிலிருந்த காவலர் எழுதினார். மணிகண்டனை எத்தனை மணிநேரம் விசாரித்தார்கள் என்றால் மணிகண்டன் சொன்னதை காவலர் டைப் செய்தார் மணிகண்டனை எத்தனை மணி நேரம் விசாரித்தார்கள் என்பது ஞாபகமில்லை. மணிகண்டனை விசாரணை முடித்தபின்னர் நான் வீட்டிற்கு சென்று விட்டேன். மணிகண்டனை விசாரணை செய்வதற்கு முன்பாக இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட மூன்று எதிரிகளை போலிசார்கள் விசாரித்தார்கள் என்பது சரிதான். இவ்வழக்கு சம்பவம் நடந்த விதம் ஆயுதம் குறித்து மணிகண்டனுக்கு முன்பாக விசாரிக்கப்பட்ட எதிரிகள் சொன்னார்கள் என்பது சரிதான். மறுநாள் காலையில் காவல் நிலையம் சென்று அங்கிருந்துபோனோம். நான் மறுநாள் காலை 6-30 மணிக்கு காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்திலிருந்து மணிகண்டன் வீட்டிற்கு காவல் வாகனத்தில் சென்றோம்., அது நான்கு சக்கர வாகனம் எந்த வகையான வாகனம் என்று ஞாபகம் இல்லை. எல்லோரும் ஒரே வாகனத்தில் சென்றீர்களா என்றால் ஒரே வண்டியில் சென்றோம். காவல் நிலையத்திலிருந்து மணிகண்டனின் வீடு எத்தனை கிலோ மீட்டர் என்று தெரியாது அது எவ்வளவு நேர பயணம் என்றால் சுமார் 10 நிமிடம் ஆகும். மணிகண்டன் வீடு இருக்கும் தெருவின் பெயர் தெரியாது. மணிகண்டன் வீடு இருக்கும் பகுதி எனது ஆளுகைக்கு உட்பட்ட பகுதி இல்லை. அந்த வீட்டின் உரிமையாளர் யார் என்று தெரியாது. அந்த வீட்டில் எத்தனை பேர் குடியிருந்தார்கள் என்பது தெரியாது. மணிகண்டன் வீடு உள்ள தெரு எந்த திசையிலிருந்து எந்த திசை செல்லும் ரோடு என்பது தற்போது ஞாபகமில்லை. அந்த வீடு எந்த திசையை நோக்கிய வீடு என்றால் தற்போது நினைவில் இல்லை. அது கூரைவீடா , ஓட்டு வீடா, என்றால் ஓட்டு வீடு, அந்த வீட்டில் எத்தனை அறைகள் இருப்பது என்று எனக்கு தெரியாது. மணிகண்டனின் வீட்டிற்குள் நான் செல்லவில்லை. கத்தி மற்றும் வண்டி ஆகியவற்றை வீட்டிற்குள் இருந்து மணிகண்டன் எடுத்து வந்தாரா என்றால் வண்டியை வெளியிலிருந்து எடுத்து ஆஜர்படுத்தினார். கத்தியை வீட்டிற்குள்ளிருந்து எடுத்து வந்து ஆஜர்படுத்தினார். அங்கிருந்து திருப்பூர் சென்றோம். திருப்பூர் மணிமாறன் வீடு ஆத்துப்பாளையம் பாரதி நகரில் இருக்கிறது. தெரு பெயர் என்ன என்றால் பாரதி நகர். மணிமாறன் வீட்டில் நகை விற்கும் அல்லது அடகு வாங்கும் கடை எதுவும்இல்லை. மணிமாறனை பார்த்தால்அடையாளம் சொல்ல முடியுமா என்றால் சொல்லமுடியும். மேற்படி திருப்பூர் எனது ஆளுகைக்குட்பட்ட பகுதி இல்லை. அந்தந்த பகுதிக்கு உரிய வி எ ஓ இருக்கின்றனர். அவ்வாறிருந்தும் எல்லா

பகுதிக்கும் உங்களை ஆய்வாளர் அழைத்து செல்ல என்ன காரணம் என்றால் எனது முன்னிலையில் வாக்கு்முலம் வாங்கியதால் என்னை அழைத்து சென்றார். வாக்குமூலம் வாங்கியபோது அது வீடியோபதிவுசெய்யப்பட்டதா என்றால் ஞாபகமில்லை . என்னால சொல்லப்படுவதுபோல்மணிகண்டன் எங்கள் முன்னிலையில்எந்தவொரு வாக்கு்முலமும் கொடுக்கவில்லையென்றும்அவரை அவரது வீட்டிற்கு என்னால் சொல்லப்படுவதுபோல் அழைத்துசெல்லவில்லையென்றும்அவர் மேற்படி தடய பொருட்களை என்னால் சொல்லப்படுவதுபோல் எடுத்து ஆஜர்படுத்தவில்லையென்றும், அவர் திருப்பூர் மணிமாறனிடம் எங்களை அழைத்து செல்லவில்லையென்றும்மணிமாறன் மூலமாக மேற்படி நகைகளை 1 வது எதிரி வாங்கி ஆஜர்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் 11 ஆண்டுகளாக இந்த பணியில்இருக்கிறேன். இந்த கால கட்டத்தில் பல குற்ற வழக்குகளில் சாட்சியமளிக்கிறேன். நான் போலிசாருக்கு கட்டுப்பட்ட சாட்சி என்றும் அதனால்அவர்கள் கேட்டுக் கொண்டவாறு கையெழுத்து போட்டு கொடுத்து விட்டு பொய் சாட்சி சொல்கிறேன் என்றால்சரியல்ல.

குறுக்குவிசாரணை ( 2 வது எதிரி தரப்பில்)

19-10-2013 அன்று எத்தனை மணிக்கு இந்த வழக்கு சம்மந்தமாக தகவல் கிடைத்தது என்றால் பகல் சுமார் 12-30 மணியிருக்கும். எனது அலுவலகம் சம்பவ இடத்திலிருந்து சுமார் 3 கி மீ தூாரம் இருக்கும். எனதுஅலுவலகம் கன்னங்குறிச்சி காவல் நிலையம் அருகில் இருக்கிறது. நான் அந்த சமயத்தில் சின்னதிருப்பதியில் ராஜகணபதி நகரில் குடியிருந்தேன். நான் குடியிருந்த இடம் சம்பவ இடத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூாரம்இருக்கும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை 3,4 முறை விசாரித்தார்கள். 19-10-2013 அன்று மாலை நேரத்தில் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரித்த நேரம் சரியாக ஞாபகமில்லை. என்னை மேற்படி தேதியன்றுகாவல் நிலையத்தில் வைத்து விசாரிததார்கள். அந்த விசாரணையின்போது காலை 8-00 மணிக்கு தகவல் கிடைத்து நானும் எனதுஉதவியாளரும் காவல் நிலையம் சென்றதாக சொன்னீர்களா என்றால் ஞாபகமில்லை. 6 வருடங்கள் ஆகிவிட்டது. ஒருவேளை காலை 8-00 மணிக்கு தகவல் கிடைத்து சம்பவ இடம்சென்றிருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன் என்பது சரிதான். நான் பகல் 12-30 மணிக்கு சம்பவ இடம் சென்றபோது சம்பவம் குறித்து புகார் கொடுக்கப்பட்டு விட்டதாக தெரிந்து கொண்டேன். இறந்த ராமகிருஷ்ணன் தம்பி பழனிவேல் என்பவரை எத்தனை மணிக்கு சம்பவத்தன்று சம்பவ இடத்தில் பார்த்தீர்கள் என்றால் நேரம் ஞாபகமில்லை. ஆனால் பார்த்தேன். நான் சம்பவ இடத்திற்கு முதன் முதலில் சென்றபோது மேற்படி பழனிவேல் அங்கு இல்லை. நான் சம்பவ இடம் சென்றபின்னர்தான் காயம்பட்ட ராஜாத்தி அம்மாள் மருத்துவமனைக்கு அனுப்பி

வைக்கப்பட்டார். அப்போது புகார் கொடுக்கப்பட்டு விட்டதா என்பதை நான் தெரிந்து கொள்ளவில்லை. பகல் 12-30 மணிவரை புகார் கொடுக்கப்படாமல் இருந்திருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன். ராஜாத்தி அம்மாளை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படும் வரை பழனிவேல் என்பவரை தெரியாது. போலிசார் விசாரித்த போது ராஜாத்திஅம்மாள் மருத்துவமனைக்குஅனுப்பி வைக்கப்பட்ட பின்னர் தகவல்தெரிந்து அங்கு வந்த ராமகிருஷ்ணன் தம்பிபழனிவேல் புகார் கொடுத்திருப்பதாக சொன்னீர்களா என்றால் சொன்னேன். பழனிவேல் எத்தனை மணிக்கு வந்தார் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் தற்போது ஞாபகமில்லை. பிற்பகல் 2-30 மணிக்கு சம்பவ இடத்திற்கு ஆய்வாளர் வந்த விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். நான் சம்பவ இடம் சென்ற சமயத்தில் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் கூட்டமாக இருந்தார்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்று தெரியாது. நீங்கள் சம்பவ இடம் சென்ற பின்னர் இது குறித்து புகார் எதுவும் வந்திருக்கிறதா என்று ஆய்வாளரிடம் விசாரித்தீர்களா என்றால் புகார் கொடுக்க ஆட்கள் போயிருப்பதாக சொன்னார்கள் அதனால் நான் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தைவிட்டு நான் கிளம்பிய போது மாலை சுமார் 6.00 மணியிருக்கும். சம்பவம் நடந்து 6 வருடங்களாகி விட்டது. சாட்சி சொல்ல வருவதற்கு முன்பாக உங்களது வாக்குமுலத்தை படித்து பார்த்தீர்களா என்றால் காவலர்களிடம் வாங்கி படித்து பார்த்தேன். அவ்வாறு படித்து பார்த்த பின்னரும் 8-00 மணிக்கு சென்றதாக கூறுவது ஞாபகமில்லையா என்றால் நான் மகஜர் மற்றும்இதர ஆவணங்கள் குறித்து தான் வாங்கி பார்த்தேன். எனது வாக்கு்முலத்தை பார்க்கவில்லை. இரண்டாவது முறையாக இந்த வழக்கில் 30-10-2013 அன்று நான் பங்கு கொண்டேன். மேற்படி தேதியன்று நான் எங்கு இருந்தேன் என்று ஞாபகமில்லை. நான் முதல் விசாரணை சொன்ன இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே அந்த இடத்தில் எதிரி கண்ணனை போலிசார் சுற்றி வளைத்திருந்தார்கள். நான் அங்கு செல்வதற்கு முன்பாக போலிசார் இந்த வழக்குசம்மந்தமாக ஒரு நபரை பிடித்து வைத்திருப்பதாகவும் விசாரிக்க இருப்பதாகவும் சொல்லி அழைத்தார்கள். 6வது எதிரியை போலிசார் பிடித்து வைத்திருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு நான் எனது பைக்கில் சென்றேன். என் உதவியாளர்தனியாக அவரது பைக்கில் வந்தார். அந்த சமயத்தில் என் உதவியாளர் வீடு கன்னங்குறிச்சியில் இருந்தது. 30-10-2013 அன்று தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் கையால் எழுதப்பட்டது. 30ம்தேதி விசாரிக்கப்பட்ட வகையில் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகள் சம்மந்தப்பட்ட ஆயுதங்கள் சம்மந்தப்பட்ட பொருட்கள் பற்றி தெரிய வந்ததாக சொல்வது சரிதான். 2 வது எதிரியை போலிசார்எத்தனை மணிக்கு கஸ்டடி எடுத்து அழைத்து வந்தார்கள் அவரை எவ்வளவு நேரம் விசாரணை செய்தார்கள் என்றால்

தெரியாது. 2 வது எதிரியை விசாரணை செய்த அன்றும எனக்கு போன் வழி தகவல்தான் போலிசாரிடம் இருந்து வந்தது. இந்த விசாரணைக்கு நான் எங்கிருந்து வந்தேன் என்பது ஞாபகமில்லை. நான் சென்ற பின்னர் தான் 2 வது எதிரியை போலிசார் விசாரிக்க ஆரம்பித்தார்கள். 2 வது எதிரியை விசாரித்து எழுதப்பட்ட வாக்குமூலங்கள் யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் ஆய்வாளர் சொல்ல சொல்லஅருகிலிருந்த காவலர் கணிணியில் தட்டச்சு செய்தார். அது என்ன வகையான கணிணி என்பது எனக்கு ஞாபகமில்லை. அந்த வாக்கு்முலம் எத்தனை மணிக்கு முடிக்கப்பட்டது என்றால் நேரம் ஞாபகம் இல்லை. ஆரம்பித்த போது மாலை 7 மணியிருக்கும். அந்த வாக்குமூலம் எடுத்த பிரிண்டர் என்ன வகை என்பது ஞாபகமில்லை. பிரிண்ட் எங்கு எடுத்தார்கள் என்பது ஞாபகமில்லை. இந்த வாக்கு்முலங்கள் மேற்படி காவல் நிலையத்தில் எந்த அறையில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. அன்று எத்தனை மணிக்கு வீட்டிற்கு சென்றீர்கள் என்றால் ஞாபகமில்லை. 2 வது எதிரியின் வாக்கு்முலம் எத்தனை பக்கங்களை கொண்டது என்றால் ஞாபகமில்லை. நீங்கள் மற்றும் ஆய்வாளர் மற்றொரு சாட்சி ஆகியோர் அனைத்து பக்கங்களிலும் கையெழுத்துசெய்தீர்களா என்றால் கடைசி பக்கத்தில்மட்டும் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து போட்டோம். 2 வது எதிரியிடம் விசாரணை முடிந்து வீட்டிற்கு சென்ற பிறகு மறுநாள் வருமாறு என்னிடம் போலிசார் முதல்நாளே சொன்னார்கள். அவ்வாறு வரச்சொன்ன நேரம் ஞாபகமில்லை. அன்றைய தினம் ஒசூருக்கு சென்ற வாகனத்தின் பதிவு எண் ஞாபகமில்லை. அதனை ஓட்டி வந்த ஓட்டுனர் பெயர் ஞாபகமில்லை. ஆனால் அவர் போலிசார். ஒசூர் சென்றடைந்த போது மணி காலை 6-45 மணியிருக்கும் . அந்தநேரத்தை ஆய்வாளர் விசாரணையில்குறிப்பாக சொன்னேனா என்பது ஞாபகமில்லை. அம்பரீஸ் என்பவருக்கு சுமார் 36,37 வயதிருக்கும். அம்பரீஸ் வீட்டிற்கு முன்பாக நகை கைப்பற்றப்பட்டது., ஒசூர் நகரத்திலிருந்து அம்பரீஸ் வீடு சுமார் எவ்வளவு தூரம் என்றால வாகனத்தில் சென்றதால் தூரம் தெரியாது. அம்பரீஸ் வீட்டை சுற்றி வீடுகள் இருந்தது. அந்த வீடு உள்ள பகுதி தெரு பகுதியாகும்.தெருவில் இருபுறமும் வீடுகள் இருந்ததா என்பது ஞாபகமில்லை. அம்பரீஸ் வீடு கூரைவீடா, என்றால் கான்கிரீட் வீடு . அந்த வீட்டிலிருந்துதான் எடுத்து வந்து நகையை அம்பரீஸ் ஆஜர்படுத்தினார்.அந்த வீட்டில் எவ்வளவு பேர் குடியிருக்கிறார்கள் என்பது தெரியாது. அம்பரீஸ் வீடு உள்ள பகுதியை சேர்ந்த பொது மக்களையோ , வி ஏ ஓ அவர்களையோ ஆய்வாளர் அவர்கள் சாட்சியாக விசாரிக்கவில்லை. அம்பரீஸ் வீட்டிலிருந்து நகைகள் கைப்பற்றிய போது நேரம் எவ்வளவு என்பது குறித்து போலிசார் விசாரணையில் சொன்னீர்களா என்றால் ஞாபகமில்லை. ஒசூரில் தயார் செய்யப்பட்ட மகஜர் கையால் எழுதப்பட்டது.அதனை எழுதியவர் யார் என்பது ஞாபகமில்லை. அந்த மகஜரில் அம்பரீஸ் கையெழுத்து

செய்தாரா என்றால் ஆமாம். சாட்சி தற்போது அம்பரீஸ் கையெழுத்து செய்ததாக சொல்வது ஞாபகமில்லை என்று தாமாக கூறுகிறார். போலிசார் என்னை விசாரித்த போது நகைகளின் அடையாளங்களை கூறினீர்களா என்றால் ஞாபகமில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் 13ம்தேதி எங்கு வைத்து விசாரித்தார் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார். அப்போது மணி என்ன என்றால் ஞாபகமில்லை. சேலம் வந்த போது மணி என்ன என்றால் ஞாபகமில்லை. எனது வாக்கு்முலத்தை காவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல காவலர் டைப் செய்தார். அதில் நான் கையெழுத்து போடவில்லை. டைப் செய்தவர் கையெழுத்து போட்டாரா என்றால் இல்லை. ஆய்வாளர் போட்டார். நகையை கைப்பற்றிய போது ஆய்வளார் அம்பரீஸை விசாரித்தார். அவரது வாக்கு மூலத்தை எழுதினார்களா டைப் செய்தார்களா என்பதுஞாபகமில்லை. ஒசூரில் எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றால் ஞாபகமில்லை. 2வது எதிரி என்னால் சொல்லப்படுவது போல் எந்த வாக்கு்முலமும் கொடுக்கவில்லையென்றும் நகையை வாங்கி ஆஜர் படுத்தவில்லையென்றும் போலிசார் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்களில் கையெழுத்து போட்டு கொடுத்து விட்டு அதனை அனுசரித்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை ..(4 வது எதிரி தரப்பில் )

இரும்பு ராடு, இரும்பு கம்பி, இரும்பு லிவர் ஆகியவை வேறு வேறு ஆயுதங்களா என்றால் இல்லை ஒன்றுதான். மேற்கூறிய ஆயுதங்கள் மூன்றும் வேறு வேறு என்பது சரியல்ல. இரும்பு லிவர் கைப்பற்றியதாக சொல்லும்நிலையில் அதன் வடிவம்குறித்து கைப்பற்றுதல் மகஜரில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் வடிவம் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. போலிசார் விசாரணையில் இரும்பு லிவர்என்று சொல்லியிருக்கிறீர்களா என்றால் ஞாபகமில்லை. சேலம் ராமநாதபுரத்திற்கு நாங்கள் சென்ற இடம்அருகில் பேருந்துநிறுத்தம் மற்றும் பொது மக்கள் நடமாட்டம் அதிகளவில் இருக்கும் பகுதி என்றால் சரிதான். நான் ராமநாதபுரத்திற்கு செல்வதற்கு முன்பாகவே 4 வது எதிரியை போலிசார் பிடித்து வைத்திருந்தார்களா என்றால் இல்லை. ராமநாதபுரத்திற்கு நாங்கள் சென்றபோது அங்கு யார் யார் இருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. அந்த சமயத்தில் 4 வது எதிரி என்ன வகையான ஆடை அணிந்திருந்தார் என்றால்ஞாபகமில்லை. அந்த பேருந்து நிறுத்தத்தில் நான்கு புறங்களிலும் என்னென்ன இருக்கிறது என்றால் ஞாபகமில்லை. ராமநாதபுரத்திலிருந்து சின்னதிருப்பதி சாந்தி நகருக்கு சென்றோம். ராமநாதபுரத்திலிருந்து சாந்தி நகர் எவ்வளவு துாரம் என்றால் சுமார் 2 -1/2 கிமீ துாரம் இருக்கும் . நான் போலிசார் விசாரித்த போது காந்தி நகர் என்று

சொல்லியிருந்தால் அது தவறா என்றால் சாந்தி நகர் என்பதுதான் காந்தி நகர் என்று தவறாக தட்டச்சு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு தவறாக டைப் செய்யப்பட்டிருப்பது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். 4 வது எதிரியின் வாக்கு்முலத்தை யார் எவ்வளவு நேரம் எழுதினார்கள் என்றால் ஞாபகமில்லை. அந்த வாக்கு்முலம் எத்தனை பக்கங்களை கொண்டது என்பது ஞாபகமில்லை. அதில் யார் யார்கையெழுத்து செய்தீர்கள் என்றால் நானும் எனது உதவியாளரும் வாக்கு்முலம் கொடுதத நபரும் கையெழுத்துசெய்தோம். அதனை எழுதிய நபர் கையெழுத்து செய்தாரா என்றால் ஞாபகமில்லை . ராமநாதபுரத்திலிருந்து சாந்தி நகருக்கு காவல் வாகனத்தில்வந்தோம்.அது நான்கு சக்கர வாகனம் ஆகும்.அந்த வண்டி நெம்பர் ஞாபகமில்லை. அந்த வண்டியில் காவல் ஆய்வாளர், எனது உதவியாளர் சம்மந்தப்பட்ட 4 வது எதிரியும்காவல்கள் சிலரும் வந்தோம். சாந்தி நகர் எனது ஆளுகைக்குட்பட்ட பகுதி இல்லை. வேறு வி ஏ ஓ ஆளுகைக்குட்பட்ட பகுதிக்கு செல்லும்போது சம்மந்தப்பட்ட விஏஓ அவர்களுக்குதகவல் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சாந்தி நகர் முட்புதரைச்சுற்றி நான்கு புறமும் என்ன அமைப்பு இருக்கிறது என்றால் வீடுகள் மற்றும் முட்புதர் ஆகியவை இருக்கிறது. எனது வாக்குமூலத்தில் முள் காடு என்று சொன்னீர்களா என்றால் ஞாபகமில்லை. அந்த முட்புதரின் நான்கு திசைகளிலும் எந்தெந்த வீடுகள் எந்த திசையை நோக்கி இருக்கிறது என்று குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது. சாந்தி நகர் பகுதிக்கு நாங்கள் சென்றபோது பிற்பகல் 3 மணியிருக்கும். அங்குசென்றது 31-10-2013 அன்று ஆகும். அந்த இடத்தில் மகஜர் யார் தயார் செய்தார்கள் என்றால் ஆய்வாளர் சொல்ல சொல்ல அங்கிருந்த காவலர் தயார் செய்தார்அதில் நானும் எனது உதவியாளரும் ஆய்வாளரும் கையொப்பம்செய்தோம்., அதனை எழுதியவர் கையெழுத்து போட்டாரா என்றால்இல்லை. அதில் எதிரி கையெழுத்து போட்டாரா என்றால் இல்லை. சம்பவத்திற்கு 12 நாட்கள் கழித்து மேற்படி இடத்திற்கு சென்றீர்களா என்றால் ஆமாம். 12 நாட்கள் புதரில் கிடந்தால் இரும்பு கம்பி துரு பிடித்திருக்குமா என்றால் இருக்கலாம். என்னிடம் காட்டப்படும் இரும்பு ராடு புதியதாக இருக்கிறதா என்றால் இல்லை. அது புதியதாகதான் இருக்கிறது என்றும் வழக்கிற்காக அதை மறைக்கிறேன் என்பது சரியல்ல முட்புதரில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் ஜீன்ஸ் பேண்ட் , சர்ட்ஆகியவை கலர் வெளுப்பதற்கும் துணி மக்கி போவதற்கும் வாய்புள்ளதா என்றால் இல்லை. வழக்கிற்காக அவ்வாறு நிறம்வெளுப்பதற்கும் துணி மக்குவதற்கும் வாய்ப்பு உண்டு என்றும் அதனை வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு திரும்பினீர்கள் என்றால் நாங்கள்அன்று பிற்பகல் 3 மணிக்குசென்றோம். எத்தனை மணிக்கு திரும்பினோம் என்பது ஞாபகமில்லை. என்னை ஆய்வாளர் விசாரித்த

வாக்குமூலத்தில் நான் கையெழுத்து போடவில்லை. எனது வாக்கு்முலம் டைப் செய்யப்பட்டது.,அதனைகாவல் ஆய்வாளர் சொல்ல சொல்ல ஒரு காவலர் டைப் செய்தார். அதனை டைப் செய்தவர் அந்த வாக்குமூலத்தில் கையெழுத்து செய்தாரா என்றால் இல்லை. எனது வாக்குமூலத்தில் அதனை ஆய்வாளர் பதிவு செய்ததாக சொன்னீர்களா என்றால் ஞாபகமில்லை. 28-10-2013 அன்றுதான் 4 வது எதிரியை நள்ளிரவு 1-00 மணியளவில் போலிசார் அவரை வீட்டிலிருந்து பிடித்ததாகவும் 31-10-2013 அன்று பிடித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்பது சரியல்ல. என்னால் சொல்லப்படுவதுபோல் 4 வது எதிரியிடமிருந்து எந்தவித தடயபொருளும் கைப்பற்றப்படவில்லையென்றும் அவைகள் இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டவை என்றும் சொல்வது சரியல்ல.

குறுக்கு விசாரணை( 3,6 எதிரிகள் தரப்பில் )

இல்லை

மறு விசாரணை. இல்லை.

Sd/-Siva

Sd/- III ADJ Salem.

24-07-2019
ஓ .எஸ். 53 /2015
வா.சா. 3 திருமதி.மோகனாம்பாள்

வா.சா. 3 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 2,4, முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.
குறுக்கு விசாரணை..

இந்த வழக்கின் வாதி அகிலாண்டேஸ்வரி மட்டும் வாதியாக இருந்துஇந்த வழக்கை முதலில் தாக்கல் செய்திருந்தார். 1 ம் வாதி பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார். வழக்கு நிலுவையில் நான் 1 ம் பிரதிவாதியாக இருந்து 2 ம் வாதியாக மாற்றப்பட்டுள்ளேன். 1 ம் வாதி தாக்கல் செய்திருந்த வழக்கு ஏற்கனவே தள்ளுபடியாகி பின்னர் மேல் முறையீடு எண் 346/2017 ல் தாக்கல் செய்து அதில் நான் நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருந்ததாக சொல்லியிருந்தேன். அவ்வர்று நான் எந்த நீதிமன்ற கட்டணமும் செலுத்தவில்லையென்றால் சரிதான். மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில்மேற்படி மேல்முறையீட்டில் நான் 1 ம் பிரதிவாதியாக இருந்த சமயத்தில் எனது பாகத்திற்காக நீதிமன்றக்கட்டணம் செலுத்தியிருந்ததாக சொல்லி வழக்காடினீர்கள் என்றால் அதில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தவறாக நீதிமன்ற கட்டணம் நான் செலுத்தியிருந்ததாகவும் ஆனால் எனக்கு பாகம் ஒதுக்கப்படவில்லையென்றும் வழக்காடி வந்ததாக சொல்வது சரியல்ல. எனக்கு 1998 ல் திருமணம் நடந்தது. அந்த தேதி முதல் நான் என் கணவருடன் சேலம் தனலட்சுமி நகரில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து அனைத்தும் ஓமலூாரில் இருக்கிறது. வா.சா.ஆ 2,4,5 ஆகியவை என் பாட்டி கந்தம்மாள் பெயரில்தான் இருப்பதாக சொல்வது சரிதான். மேற்படி கந்தம்மாள் ஜெயராமன் என்பவரின் பெயரில் 3-3-2011 ல் ஒரு செட்டில் மெண்ட் எழுதி வைத்திருப்பதாக சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெணட் ஆவணத்தில் சுயராஜ்ஜிதமாக சம்பாதித்த சொத்தை ஜெயராமனுக்கு எழுதி வைத்திருப்பதாக கந்தம்மாள் சொல்லியிருக்கிறாரா என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறுதான் மேற்படி செட்டில்மெண்ட்டில் எழுதப்பட்டிருப்பதாக சொல்வது எனக்கு தெரியாது. மேற்படி சொத்து கந்தம்மாளின் தனிப்பட்ட சொத்து என்றும் அதனை அவர் செட்டில்மெண்ட் மூலம் எழுதி வைக்க அவருக்கு உரிமை இருப்பதாக சொல்வது சரியல்ல. தற்போதைய 1,3 ம்பிரதிவாதிகள் மோகன்ராஜ் மற்றும் சீனிவாசன் ஆகியோர் எனக்கு தம்பிகள். 2 ம் பிரதிவாதி செல்வலட்சுமி எனது சகோதரி. மேற்படி மோகன்ராஜ், சீனிவாசன் ஆகியோர்கள் தாவா சொத்தில்தான் குடியிருக்கிறார்களா என்றால் இலலை. பண்ணப்பட்டியில் குடியிருக்கிறார்கள். பண்ணப்பட்டியில் உள்ள தாவா சொத்தில் தான் மேற்படி மோகன்ராஜ் , சீனிவாசன் குடியிருக்கிறார்கள்.மேற்படி செல்வலட்சுமி பெங்களுரீல் குடியிருக்கிறால். தற்போதைய 4 ம் பிரதிவாதி தாவா சொத்தில்தான்

குடியிருக்கிறார். தற்போதைய 6ம் பிரதிவாதி மல்லூரில் குடியிருக்கிறார். தற்போதைய 7ம் பிரதிவாதி கந்தம்மாள் தாவா சொத்தில் குடியிருக்கிறார். தாவா சொத்தின் மூலம் ரூபாய் 40 ஆயிரம் வாடகை கிடைக்கிறது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறீர்களா என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். செல்போன் டவருக்கு பழனிசாமி என்பவர் வாடகைக்கு விட்டார். மேற்படி பழனிசாமி எனது தகப்பனார். எனது தகப்பனார் ரூ 15 ஆயிரம் வாடகைக்கு விட்டார். அந்த செல்போன் கம்பெனி பெயர் எனக்கு தெரியாது. இரண்டு கடைகள் வாடகைக்கு விட்டிருப்பதாக சொல்லியிருப்பதில் யார் வாடகைக்குவிட்டார் என்றால் எனது தம்பியும் எனது தகப்பனாரும் சேர்ந்து வாடகைக்கு விட்டார்கள். ரூ 600க்கு வாடகைக்கு விட்டது யார் என்றால் குடும்பத்தில் உள்ளவர்கள் விட்டிருக்கிறார்கள். வாடகைக்கு விட்டது போல் எஞ்சிய சொத்துக்களை எனது தகப்பனார் ஓட்டி வந்தார். குப்புசாமி, ஜெயராமன் ஆகியோர் அவரவர் நிலங்களை அவரவர் ஓட்டி வருகிறார்களா என்றால் ஆமாம். 20 வருடங்களுக்கு முன்னர் வாய்மொழியாக பாகம் பிரித்து அவரவர் பாகத்தை அவரவர் ஓட்டி வருவதாக சொன்னால் அவ்வாறு பாகம் எதுவும் பிரிக்கப்படவில்லை. கந்தம்மாள் செட்டில்மெண்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு அது எழுதப்பட்ட காலத்திலேயே தெரியும் என்றும் அந்த வகையில் காலம் கடந்த இந்த வழக்கை தாக்கல்செய்திருப்பதாக சொல்வது சரியல்ல.

20-1-2005ல் நான் வில்லங்க சான்று பார்த்திருப்பதாகவும் அதன்படி பார்த்தாலும் 2008ம் ஆண்டிற்குள் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும் அந்த வகையிலும் வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்வது சரியல்ல. ஜெயராமன் பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் அடிப்படையில் அந்தசொத்து அவருக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும்அதில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றுசொல்வது சரியல்ல. மேற்படி ஜெயராமன் எல் ஐ சி யில்வேலை பார்த்து ரூபாய் 1.50 லட்சம் சம்பாதிப்பதாக சொல்வதற்கு ஆவணம் இருக்கிறதா என்றால் வழக்கறிஞருக்குத்தான் தெரியும். செங்கோடன் வழியில் கிடைத்தசொத்துக்களில் வாய்மொழியாக ஏற்பட்டபாகத்தில் கிடைத்த சொத்துக்களை அவரவர் அடைந்துஅனுபவித்து வருவதாகவும் அதன் அடிப்படையில் எனக்கு பாகம் வேண்டுமென்றால் எனது தகப்பனாரின் பாகத்தில்தான் பாகம் கேட்க முடியும் என்றும் சொல்வது சரியல்ல. வாதிகளாகிய எங்களால் கோரப்பட்டுள்ளவாறுபரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்பது சரியல்ல.

(10,11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக கேட்டுக்கொண்டதன் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- Tmt.Mohanambal III ADJ Salem.

24-07-2019
ஓ .எஸ்.65/2013
வா.சா. 1 திரு . சரவணன்

வா.சா. 1 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 4 முதல் 21 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை..

தாவா சொத்தில் ஏற்பட்ட கிரையங்கள் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டுஅது குறித்த குற்ற வழக்கு சங்ககிரி நீதித்துறை நடுவர் எண் 1 நீதிமன்றத்தில் சிசி 15/2018 வழக்குநடந்து வருவதாக சொல்வது எனக்கு தெரியாது. நான் சேலம் குற்ற நுண்ணறிவு பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சொத்தில் ஆராயியம்மாள் எழுதி வைத்த உயிலின் அடிப்படையில் எனக்கு உரிமை இருப்பதாக வழக்காடி வருகிறேன் என்பது சரிதான். தாவா சொத்தில் ஆராயியம்மாளுக்கு எந்த வகையில் உரிமை ஏற்பட்டது என்றால் 1959 ல் ஏற்பட்ட பாகம் மற்றும் 1961 ல் ஏற்பட்ட விடுதலை ஆவணம் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி ஆராயியம்மாளுக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது. வா.சா.ஆ 1 உயிலில் கண்ட சொத்து 22-1-1961 கிரைய ஆவணப்படியும் மேலும் 18-2-1961 ம்தேதியிட்ட விடுதலை பத்திரப்படியும் , 1961 ம் வருடத்திய கிரைய ஆவண எண் 325/1961 ஆவணப்படியும் தனக்கு பாத்தியப்பட்டது என்று ஆராயியம்மாள் சொல்லியிருக்கிறார் என்பது சரிதான். ஆவண எண் 325/1961 கிரைய ஆவணமா விடுதலை ஆவணமா என்றால் விடுதலை ஆவணம் மற்றும் கிரைய ஆவணம். ஆவண எண் 325/1961 ஐ யாருக்கு விடுதலை செய்துகொடுத்திருக்கிறார் என்றால் நடராஜ முதலியார் ஆராயியம்மாளுக்கு விடுதலை செய்துகொடுத்திருக்கிறார். இதே சொத்து சம்மந்தமாக எனது தகப்பனார் ராதாகிருஷ்ணனும் சிறிய தகப்பனார் ராஜமாணிக்கமும் சேர்ந்து சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ. எண் 242/1993 ல் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்ததாக சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பரிமளா, சிவபிரகாசத்தின் இரண்டாவது மனைவி. கல்பனா பரிமளாவின் மகள். மேற்படி பரிமளா, மற்றும் கல்பனா ஆகியோர் இதே சொத்துசம்மந்தமாக சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ. 423/96 ல் ஒரு வழக்கு பாகம் கோரி தாக்கல்செய்திருப்பதாக சொல்வது எனக்குதெரியாது. எனது பிராதில் தாவா சொத்து 1 ம் வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டசொத்து என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அவ்வாறு 1 ம் வாதிக்கு எந்த ஆவணத்தின்படி பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் ஆராயியம்மாள் எழுதி வைத்த உயிலின்படி ஒதுக்கப்பட்டது. பாகம் ஒதுக்கப்பட்டது என்ற வாசகம் பாகப்பிரிவினை சம்மந்தப்பட்ட ஆவணத்தில் எழுதப்படும் ஒரு வாசகம் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். உயில்மூலமாக ஒரு சொத்தை ஒருவருக்கு

பாத்தியப்பட்டிருந்தால் மட்டும் முடியும் என்பது சரிதான். ஆராயியம்மாள் எழுதி வைத்த உயிலை நான் படித்து பார்த்திருக்கிறேன். உயிலில் உள்ள வாசகங்கள் சரிதானா என்றால் சரிதான். என் தகப்பனார் ராதகிருஷ்ணன் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி . என் தாயார் தற்போது உயிருடன் இல்லை. மேற்படி உயிலில் கண்ட பி செட்டியூலில் கண்டுள்ள சொத்து குறித்து இந்த வழக்கில் பரிகாரங்கள் கேட்டிருக்கிறேன் . உயில் படி அதில் கண்ட சொத்தை எனதுதகப்பனார் அவரது ஆயுட்காலம் வரை அனுபவிக்கவும் அவரது ஆயுளுக்கு பின்னரே அந்தசொத்து எனக்குசேரவேண்டியதாக கண்டு எழுதப்பட்டிருப்பதாக சொன்னால் சரியல்ல. உயிலில் கண்ட சொத்தில் எனது தகப்பனாராகிய 1ம் பிரதிவாதி தனது பாகத்தை ஒதுக்க கோரி நீதிமன்ற கட்டணம் செலுத்தியிருப்பதன்படி அவருக்கு பாகம் கோர உரிமையில்லை என்றால் அவருக்கு பின்னர் எனக்கு பாத்தியம்இருக்கிறது. எனது தகப்பனாரின் ஆயுளுக்கு பின்னர் உயிலில் கண்டசொத்தில் எனக்கு பாத்தியம் ஏற்படுவதாக தாங்கள் கூறும் நிலையில் எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் வரை நான் அதில் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் நான் 1/3 பாகம் கோருவதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. உயில் வாசகங்களுக்கு விரோதமாக 1/3 பாகம் கோருகிறீர்களா என்றால் இல்லை. ஆராயியம்மாள் உயிருடன் இருந்த சமயத்தில் ஜனார்த்தனன் என்பவருக்கு ஒரு பவர் பத்திரம் கொடுத்திருந்தது தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஜனார்த்தனன் என்பவருக்கும் மேற்படி உயிலின் படி ஆராயியம்மாள் ஒரு சொத்தை கொடுத்திருக்கிறார் என்பது சரிதான். மேற்படி ஜனார்த்தனன் ஆராயியம்மாள் உயிருடன் இருந்த சமயத்தில் தனக்கு உயில்படி கிடைத்த சொத்தையும் , பவர்படி கிடைத்த சொத்தையும் அவரது மனைவி யசோதா என்பவருக்கு 20-11-1993 ல் ஒரு கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்படுத்தியிருப்பதாக சொல்வது எனக்கு தெரியாது. ஒரு உயில்படி எழுதி வைக்கப்பட்ட சொத்து உயிலை எழுதி வைத்தவர் இறந்த பின்னர்தான் அந்த சொத்துரிமை மாற்றம் ஏற்படும் என்பது தெரியுமா என்றால் தெரியும். ஆராயியம்மாள் உயிருடன் இருந்த போது அவர் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயிலில்கண்ட சொத்தை ஜனார்த்தனன் அவரது மனைவிக்கு கிரையப்படி பாத்தியப்படுத்தியிருப்பது செல்லாது என்றால் எனக்குதெரியாது. ஆவண எண் 325/1961 ன் படி நடராஜ முதலியார் எனது தகப்பனார் உள்ளிட்ட 6 நபர்களுக்கு விடுதலை ஆவணம் எழுதி வைத்திருப்பதாக சொல்வது சரிதான். அந்த விடுதலை ஆவணத்தில் கண்டுள்ள 6 மைனர்களுக்கும் கார்டியனாக ஆராயியம்மாளை காட்டியிருப்பதாக சொல்வது எனக்குதெரியாது. ஆராயியம்மாள் ஆவண எண் 325/1961 ஆவணத்தின்படியான சொத்து தனக்கு விடுதலைமூலம் கிடைத்ததாக சொல்லி உயில் ஆவணத்தில்குறிப்பிட்டிருக்கிறதா என்றால்

சரிதான். ஆவண எண் 325/1961 விடுதலை ஆவணத்தில் கண்டுள்ள சொத்து குறிப்பிட்ட செக்குபந்திக்குள் கட்டுப்பட்ட 1.23-1/4 ஏக்கர் விஸ்தீரணத்தில் 1/7 பாகத்தை விடுதலை செய்து கொடுக்கப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறது என்றால் , எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்தேன். அந்த அறிவிப்பு ஆகிய வா.சா-ஆ 24 ல் இருந்து உட்பிரிவுகள் குறித்து குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 24 ல் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 299/2 பி/1 இந்த வழக்கு சொத்தில் சேர்க்கப்படவில்லையென்றால் ஞாபகமில்லை. ராஜேஸ்வரிக்கு ருபாய் 10 ஆயிரம் கொடுத்து ரசீது எதுவும் வாங்கினீர்களா என்றால் தெரியவில்லை. 22-6-1961 ல் ஆராயியம்மாள் பெயரில் ஒரு கிரையம் ஏற்பட்டிருப்பது தெரியுமா என்றால் தெரியும். அந்த கிரையத்தின்படி எந்தசொத்து ஆராயியம்மாள் அவர்களால் கிரையம் வாங்கப்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியும். எந்தசொத்து என்றால் அது வீடு ஆகும். 22-6-1961 தேதியிலேயே ஆராயியம்மாளுக்கு கிரையம் கொடுத்தவர்கள் ஒரு மறு கிரைய ஒப்பந்தம் எழுதி வாங்கியிருப்பது தெரியுமா என்றால் தெரியாது. 30-6-1949 ல் அங்காயியம்மாள் என்பவருக்கு தாவா சொத்து உள்ளிட்ட சொத்துக்கள் குதவை செய்யப்பட்டதாக சொல்லப்படுவது தெரியுமா என்றால் தெரியும். அந்த குதவை 16-6-1959 ல் குதவை மீட்கப்பட்டிருப்பது தெரியுமா என்றால் தெரியும்.

(கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/- Saravanan                                                                 Sd/- III ADJ Salem.

24-07-2019
ஓ .எஸ். 74 /2011
வா.சா. 2   திரு.இப்ராகிம்

வா.சா. 2 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 4  பிரதிவாதி  தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை..

நான் முதல் விசாரணையில் சொல்லியிருக்கும் ஆவணங்கள் பற்றி தெரியும். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பது எனக்குதெரியாது. பணம் கொடுக்கப்பட்டதற்கு மட்டும் நான் சாட்சி.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Ibrahim                                                                Sd/- III ADJ Salem.

IN THE COURT OF THE SPECIAL JUDGE FOR E C ACT CASES , SALEM

MCOP No.1521/2005

Deposition of PW - 1 Witness of Plaintiff Petition/ Defendant/ Respondent Solemnly affirmed by Thiru V. Rajasekaran, Assistant of this Court in accordance with provisions of Evidence OATH Act X 1969 on 24th day of July – 2019.

| | |
|---|---|
| Name திருமதி. ராதா | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

ம.சா. 1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை..

முதல்விசாரணை நிரூபண வாக்குமுலம் தாக்கல்செய்கிறேன். ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை.. இல்லை.

Sd/- Tmt.Radha SD/-III ADJ Salem.

IN THE COURT OF THE SPECIAL FOR E.C ACT CASES, SALEM

MCOP No.1521/2005

Deposition of PW - 1Witness of Plaintiff Petition/ Defendant/ Respondent

Solemnly affirmed by Thiru V. Rajasekaran, Assistant of this Court in accordance

with provisions of Evidence OATH Act X 1969 on 24th day of July – 2019.

| | |
|---|---|
| Name திரு. கணேசன் | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

ம.சா. 1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை..

முதல்விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்செய்கிறேன். ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை.. இல்லை.

Sd/- Ganesan Sd/- III ADJ Salem